# AN EMPIRICAL STUDY OF GANDARA MUSLIM'S HISTORY OF SOCIAL STATUS

MMF. SALMA[1], MAN. HAADHA[2], MRF. FASMILA[3]

[1,2] Department of Arabic Language, SEUSL.

[3] Department of Islamic Studies, SEUSL.

## Abstract

Gandara is region with Muslim minority in Mathara district with decades of history. It is filled with all kind of the resources that needs of human society. This research is one of the field survey that based on history and its evolving social tendency of the Gandara in Mathara district. So this research was done in particular area for fill the research gap. Data were collected using primary data and secondary data in order to carry out this research that analyze the history of Muslim community in Gandara and identify the social trajectory after their colonization. Interviews and observation methods were used as primary data and articles, books, essays were used as secondary data. The calculation of this research is exposing about this the emergence of a cultural history that is integrated by immigrants the history and culture of Gandara.

**Keywords**: Gandara, Muslims, History, Society, Growth, Region

**ஆய்வு அறிமுகம்**

தென்மாகாணத்தைப் பொறுத்த வகையில் மூன்று மாவட்டங்களினால் உருப்பெற்றதாகும். எனவே தென்மாகாண முஸ்லிம்களைப் பொறுத்தவரை மிகவும் பரந்த நிலப்பரப்பில் சிதறலாக வாழும் முதன்மை சிறுபான்மை இனமாகும். குறிப்பாக மாத்தரை மாவட்டத்தில் வெலிகமை, ஹொரகொட, போர்வை, மீயெல்லை, புஹுல்வெல்லை, மாத்தரை, கந்தரை, தக்குவல்லை, வலஸ்முல்லை, யகஸ்முல்லை, கிரிந்தை போன்ற இடங்களில் முஸ்லிம்கள் சிதறலாக வாழ்கின்றனர்.இங்கு வெலிகம என்ற பிரதேசமானது முஸ்லிம்களது பெரும் பட்டினமாகக் கூறப்படுகிறது. இப்பிரதேசங்களில் சிறுபான்மை முஸ்லிம்கள் வாழ்ந்தாலும் மாற்றுமதத்தவர் களுடனான உறவும், சமூக நல்லிணக்கமும் ஆரம்ப காலந்தொட்டே பேணப்பட்டே வருகின்றது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். வரலாற்றில் வனப்பும் சிறப்பும் மிக்க ஒரு மாவட்டமாக மாத்தரை மாவட்டதைத்தையும் குறிப்பிடலாம். இயற்கை அழகும் கண்ணைக் கவரும் காட்சிகளும் இப்பிரதேசத்தை வலுவூட்டுவதோடு மூவின மக்களும் வாழும் ஒரு பிரதேசமாகவும் பல்லின கலாச்சார தன்மையும் இம்மாவட்டத்திற்கே உரிய சிறப்பியல்புகளை எடுத்துக்காட்டுகின்றன.

இப்பிரதேசமானது சிங்களவர்களின் பண்பாட்டுச் செறிவைக் காட்டும் பிரதேசமாகக் காணப்பட்டாலும் முஸ்லிம் மக்களுக்கு உதவி ஒத்தாசை வளங்கும் நற்குணங்களை தம்மகமத்தே கொண்டடோராக இப்பிரதேச மாற்றுமதத்தவர்கள் காணப்பட்டார்கள். இப்பிரதேசத்தில் ஆரம்ப காலத்தில் நடைபெற்ற பிரச்சினைகளின் போது சிங்கள மக்களக்கு போதிய பாதுகாப்பினை வழங்கி அவர்களை தமது இருப்பிடங்களில் தங்க வைத்து பாதுகாப்பு உதவி புரிந்தனர். இவ்வாறான உதவிகளுக்கு அவர்களது செயற்பாடுகள் நன்றிக்கடனாக அமைந்துள்ளது. இன்னும் இப்பிரதேச வாசிகளது பேச்சுவழக்கானது சிங்கள மற்றும் தமிழ் மொழியை ஒத்ததாக காணப்படுகிறது. இப்பிரதேச வாசிகளது தனிச்சிறப்பாக சிங்கள மொழித் தேர்ச்சியினைக் குறிப்பிடலாம். இன்னும் சிங்கள மொழியானது தமிழ் மொழியிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதை அவர்களது பேச்சு வழக்கின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**ஆய்வுப் பிரச்சினை:**

மாத்தரை மாவட்டத்தில் காணப்படும் கந்தரை எனும் இப்பிரதேசத்திலுள்ள கிட்டத்தட்ட 0.6% ஆன முஸ்லிம்களே வாழ்கின்றனர். எனவே அவ்வூரின் வரலாற்றுத் தொன்மையும் அவர்களது வாழ்க்கை முறையில் எவ்வாறான மாற்றங்கள் காணப்படுகின்றது என்பதை ஆராயும் ஒரு கள ஆய்வாகும்.

**ஆய்வின் நோக்கம்**

- கந்தரை முஸ்லிம் சமூகத்தின் வரலாற்றை தெரிந்து கொள்ளல்.
- அவர்களது குடியேற்றத்திற்குப் பின்னரான சமூகப் போக்கினை கண்டறிதல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகியவற்றை ஆய்வு மூலங்களாக பயன்படுத்தப்பட்டது. இவ்வரலாற்று ஆய்வுக்கட்டுரையை துள்ளியமாக கணிப்பீடு செய்வதற்கு மாத்தரை மாவட்டத்தின் கந்தரைப் பிரதேசம் கள ஆய்வுப் பிரதேசமாக தெரிவு செய்யப்பட்டு கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகள் நேர்காணல், அவதானிப்புக்கள் என்பவற்றை இவ்வாய்வு முதல் நிலைத் தரவுகளாக கொண்டுள்ளது. இவ்வாறான தரவுகளைப் பெறுவதற்கு 05 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டன. மாதிரிகள் அனைவரும் கந்தரையைப் பிறப்பிடமாகக் கொண்ட முஸ்லிம் மக்களாவர். இரண்டாம் நிலைத் தரவுகளாக கந்தரை வரலாறு தொடர்பான சிலாசனங்கள், நூல்கள், கட்டுரைகள் என்பன இவ்வாய்விற்குப் பயன்படுத்ப்பட்டன.

**முன்னைய ஆய்வுகள்**

இத்தலைப்புடன் தொடர்பான எந்தவொரு நூல்களும் இதுவரைகாலமும் தொகுக்கப்படவில்லை. என்றாலும் ஆங்காங்கே எழுதப்பட்ட கட்டுரைகள் மற்றும் பரிசளிப்பு விழா நூல்களின் மூலம் இப்பிரதேசத்தினுடைய வரலாற்றுச்சான்றுகளையும் அதே போல் குடியேற்றத்திற்குப் பின்னரான சமூகப் பின்னனியையும் பெற்றுக் கொள்ள முடிந்தது. இந்த வகையில் மாறை அல் அஸ்ஹர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்தின் மூலம் வெளியிடப்பட்ட ''பரிசளிப்பு விழாப் புத்தகம்'' 201 கந்தரையின் வரலாறு பற்றி சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கல்வி, பொருளாதாரம் போன்ற விடயங்கள் பற்றியும் விளக்கப்பட்டது. பொதுவாக மேற்குறித்த ஆக்கங்கள் யாவும் கந்தரை வரலாறு, கல்வி, பொருளாதாரம் போன்ற விடயங்கள் தொடர்பாக சிறிதளவுவிளக்கிய போதிலும் ''கந்தரை முஸ்லிம்களின் வரலாறு'' என்ற நேரடியாக எந்தவொரு நூலும் இதுவரை எழுதப்படவில்லை என்பது குறிப்படப்பட வேண்டிய ஒன்றாகும்.

**கலந்துரையாடலும் கண்டுபிடிப்புகளும்**

1. **கந்தரைப் பிரதேசமும் முஸ்லிம்களும்**

தென்மாகாணத்தின் முத்தாய் தேவாந்திர முனையின் சொத்தாய் அழகுற வீற்றிருக்கிறது எழில் கொஞ்சும் கந்தரைக் கிராமம். அதன் எல்லைகளாக தலல்ல எனும் கிராமமத்தை வடக்காகவுமம், கனம்பிடிய கிராமத்தை மேற்காகவும், நுன்னவெல்லையை தெற்காகவும், மீரியகல்ல நாவுறுன்னயை கிழக்காகவும் கொண்டுள்ளது.

கந்தரைப் பிரதேசம் 4 கிராம சேவகர் பதிவுகளைக் கொண்டுள்ளது. அவை நான்கு திசைகளையும் மையமாககக் கொண்டே அமையப்பெற்றுள்ளது. (கந்தரை வடக்கு, கந்தரை கிழக்கு, கந்தரை தெற்கு, கந்தரை மேற்கு) பிரதேசக அமைப்பும் இவ்வாறான அமைப்பிலே அமையப் பெற்றுள்ளது. பல பிரிவுகளைக் கொண்டதாக கிராம சேவகர் பிரிவு காணப்பட்டாலும் முஸ்லிம் மக்களின் தொகை குறைவாகவே காணப்படுகிறது. என்றாலும் இக்கிராம முஸ்லிம்களின் சமூக, தலைமைத்துவத்தை ஏற்று நடத்தும் பொறுப்பு கந்தரையைச் சேர்ந்த முஸ்லிம்களையே சாறும். இப்பிரதேதசத்திலே சிறுபான்மை முஸ்லிம்களே வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக இன நல்லுறவு என்பது இக்கிராம மக்களிடையே காணப்படக்கூடிய ஓர்அம்சமமாக காண முடிகிறது.

பல்வேறு வகையான இயற்கை வளங்களைக் கொண்ட இக்கிராமமானது சுற்றுலாத்துறையினது பார்வையிலும் ஈர்க்கப்பட்ட ஒன்றாகும்.

2. **கந்தரை முஸ்லிம்களது வரலாறு**

கந்தரை முஸ்லிம்களது வரலாறு பழமை வாய்ந்ததென்பதை எழுதப்பட்ட ஆவணங்களும் செவிவழிச் செய்திகளும் எமக்கு கிடைக்கப் பெறுகின்ற ஆதாரங்களும் எடுத்துக் கூறுகின்றன. இப்பிரதேசத்திலேயே சிறுபான்மை முஸ்லிம்கள் பரவலாக வாழுகின்ற ஒரு பிரதேசமமாகும்.

கந்தரை எனும் நாமம் ''கம்தொர'' எனும் பெயரிலிருந்து திரிபடைந்து வந்திருக்கலாம். ''கம்தொர'' எனும் சிங்கள் வடிவம் ''கிராம வாசல்'' எனும் பதத்தைத் தாங்கி நிற்கிறது. கபுகம, நாவறுன்ன, உஸ்வெல்ல, கனம்பிடிய, மில்லவெவ, தலல்ல, மீரியகல, நுன்னவெல்ல என்ற பல கிராமங்களுக்குள் நுழைவதற்கான ஒரு வாசலாக இவ்வூரின் தரைத்தோற்றப்பாங்கு அமைந்திருப்பதே இப்பெயர் வரக்காரணம் எனத் துணியலாம்.

வெலிகமையைச் சேர்ந்த முர்ஸி மரிக்கார் எனும் பெரியார் கி.பி 1520ஆம் ஆண்டு காலி போர்த்துக்கேய தேசாதிபதி பிஙைட அன்ரேட் என்பவரது செயலாளராகவும் மொழி பெயர்ப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். அவருக்கு அழகிய இரு பெண் பிள்ளைகள் இருந்தததாகவும் அவர்களில் ஒருவரை தேசாதிபதி மணம்முடித்துத் தரும் படி வலுக்கட்டாயப்படுத்தியதாகவும் கூறப்படுகின்றது. இதன் காரணமாக அப் பெரியாரும் அப்பிள்ளைகளும் அப்பிரதேசத்தை விட்டு விட்டு கந்தரைக்கு அருகாமையில் வாவ்வ என்ற பிரதேசத்தில் துறவியர்களாக வாழ்ந்து மரணித்ததாகவும் அங்கு காணப்படுகின்ற அடக்கஸ்ததலங்களது அடையாளங்கள் வெளிப்படுத்துகின்றது.

இக்கதை இவ்வாறிருக்க மாத்தறை காஸிம் புலவரின் மாணவன் அபுல் ஹஸன் என்பவர் கூறுவதாவது, தற்போது தெவிநுவர விஷ்ணு மகாதேவாலயமாக இருக்கும் அவ்விடத்தில் முன்பு இருந்தது ஒரு பள்ளிவாசலே. பள்ளிவாசளில் முஅத்தனின் மகளாரின் திருமணத்திற்கு வருகை தந்த அப்பிரதேசத்தின் தேசாதிபதி அம்மணப்பெண்ணை தனக்கு மமணம் முடித்துத் தருமாறு விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டதன் விளைவாக முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டு சொத்துக்கள் பறிக்கப்பட்டன. போரத்துக்கேயர் மாத்தரையிலிருந்தும் தெவிநுவரயிலிருந்தும் முஸ்லிம்களை விரட்டியடித்த போது தப்பியோடியவர்கள் கந்தரையிலும் அதனை அண்மித்த பிரதுேசங்களிலும் குடியேறினர்.

இவ்வாறு ஏற்பட்ட குழப்பங்களினால் தமது குடியிருப்புக்களையும் வரத்தகத்தையும் இழந்து திக்குத் திசையற்று நின்ற முஸலிம்களுக்கு கந்தரை எனும் பிரதேசம் கைகொடுத்தது எனலாம். 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே முஸ்லிம்கள் கந்தரையிலும் அதனை அண்மித்த பிரதேசத்திலும் குடியமரத்தப்பட்டனர்.இப்பிரதேசத்தில் வாழ்வாதாரங்களுக்கான சகல வசதிகளும் போதியளவு காணப்பட்டன. பரந்த நிலப்பரப்போடு கூடிய காடுகளையும், வயல் நிலங்களையும், கடல் பரப்பினையும் கொண்டு விளங்கியது.

இன்னும் கந்தரை ஜுமுஆ மஸ்ஜிதை அண்மித்த மையவாடியில் இரண்டு நல்லடியார்களின் கல்லரைகள் அமைந்துள்ளன. அவற்றில் ஒன்றில் குறைஷி வம்சம் (ஸாதாத்மார்களுக்கான) சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. அது இப்றாஹீம் முதாரிஸ் மௌலானா என்பவருடைய கல்லறையாகும். அவர் கந்தரைப் பிரதேசத்தில் சன்மார்க்க முயற்சிகளில் ஈடுபட்டதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுப் பாடத்தில் (MA) முதுமானிப்பட்டம் பெற்ற சந்தனலால் விஜேசிங்க என்பவர் தனது ஆய்வுக்கட்டுரையில் தகுந்த ஆதாரங்களை மேற்கோள்காட்டி குறிப்பிடுகின்றார். அடுத்த கல்லறை ஹி.1263 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவை இரண்டுமே 18ஆம் நூற்றாண்டின் பிற்காலப் பகுதியிலும் கந்தரையில் முஸ்லிம்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு சான்று பகிர்கின்றது.

இன்னும் கி.பி 17ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது ஒல்லாந்தர் தம்பாதுகாப்பிற்காக இந்தோனேசியா, மலேசியா, ஜாவா, சுமாத்திரா ஆகிய நாடுகளில் இருந்து படைவீரர்களை வரவழைத்தனர். அவர்கள்நிரந்தர வதிவிடமாக தென்மாகாணத்தில் திஸ்ஸ-கிரிந்தையை அமைத்துக் கொண்டனர். இதன் விளைவாக இவர்களது தாக்கம் கந்தரைர வரையில் காணப்பட்டது. தற்போது காணப்படுகின்ற தபால் நிலையற்திற்கு அருகாமையில், ''ஜாக வத்தை'' (ஜாவர்களின் தோட்டம்) என்ற பிரதேசத்தில் ஒரு பள்ளிவாசலை கட்டினார்கள். இதற்கான நிலப்பதிவு மத்தரைக் கச்சேரியில் காணப்படுகின்றது.

எனவே இவ்வாறான ஆரம்பகால பதிவுகளின் மூலமும் வாய்வழி வந்த கதைகளின் மூலமும் கந்தரை முஸ்லிம்களது வரலாற்றினை அறிந்து கொள்ள முடிகிறது.

### 3. குடியேற்றத்திற்குப் பின்னரான சமூகப் போக்கு

கந்தரையில் முஸ்லிம்கள் குடியேற்றத்திற்குப் பின்னர் அவர்களது சமய, சமூக. கலாச்சார, பொருளாதார விடயங்களிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக அவர்களது சமய கிரிகைகளை மேற்கொள்வதற்காக 1900ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு பள்ளிவாயல் உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அப்பள்ளிவாயலானது 1940 களில் புணர்நிர்மானம் செய்யப்பட்டு, அதனைத் தொடர்ந்து 2015ஆம் ஆண்டு பள்ளிவாயல் உடைக்கப்பட்டு புது நிர்மாணத்துடன், புதுப் பொழிவு பெற்று வருகிறது. அத்துடன் கந்தறை நலன்புரிச் சங்கத்தின் உழைப்புடன் நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தில் மஸ்ஜிதுந் நூர் பள்ளி வாசலும் அல்-அஸ்ஹர் வித்தியாலயத்திற்கென ஒரு மஸ்ஜிதும் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.

அதே போல் எமது ஊரிலும் அதனை அண்மித்த கிராமங்களிலும் வருடாவருடம் புறுதாக் கந்தூரி எனும் பெயரில் கந்தூரி நிகழ்வு ஒன்று இடம் பெற்று வருகிறது. இந்நிகழ்வானது அஸ்ஸெய்யித் பஹாஷிம் பாஅலவி மௌலானா அவர்களால் 1907 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதே போன்று இப்பிரதேசத்தில் மீலாத் விழாக்கள், நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் என்பன பெரும் விழாக்களாக தொடர்ந்து

கொண்டாடப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் காலா காலமாக பல தலைமுறை தலைமுறையாக தொடர்ந்து வருகின்ற கலை கலாசார தனித்துவங்களைக் கொண்டுள்ளது.

இன்னும் கந்தரைக்கு என ஒரு பாடசாலை இல்லாததை உணர்ந்த ஆங்கிலேயத் தேசாதிபதி மூலமாக பாடசாலை ஒன்றை வேண்டிய போது ஹக்மனைத் தொகுதியுள்ள ''மாவரல'' எனும் கிராமத்திற்கு ஒதுக்கப்பட்ட பாடசாலை கந்தரை முஸ்லிகளுக்காக வழங்கப்பட்டது. இப்பாடசாலையானது 1938 இல் அமைக்கப்பட்டு இன்று மாறை அல் அஸ்ஹர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயம் என்ற பெயரில் பிரகாசிக்கின்றது. அதிலும் குறிப்பாக 25 க்கு மேற்பட்ட பட்டதாரிகளை உருவாக்கிய பெருமை இக்கலையகத்திற்கே உரியதாகும். இன்னும் இப்பிரதேச மக்கள் மும்மொழியிற்கும் கரிசனை காட்டக் கூடியவர்களாகவும் காணப்படுகிறார்கள்.

இன்னும் இப்பிரதேச மக்களது பொருளாதார நிலையானது பெரும்பாலும் வியாபாரத்தை ஒட்டியதாகக் காணப்படுகிறது. அதே போல் இப்பிரதேச மக்களது வருமாகமானது தமது அன்றாட வாழ்க்கையை ஓட்டிச்செல்லக் கூடிய வகையில் அமையப் பெற்றுள்ளது.

எனவே இப்பிரதேச மக்களது முன்னேற்றமானது எல்லாத் துறையிலும் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றது என்பதை உறுதி செய்ய முடிகிறது.

**முடிவுரை**

கந்தரையின் வரலாற்றை நாம் ஆராயும் போது பல்வேறு இனக்குழுக்கழும் குடியேறிய ஓர் இடமாக இப்பிரதேசத்தைக் காண்கின்றோம். அவ்வாறே இப்பிரதேசத்திற்கு அண்மையில் உள்ள மக்களே இப்பிரதேசத்தில் குடியேறினர். உதாரணமாக, காலி, மாத்தறை, தெவிநுவர பொன்ற பிரதேசங்களிலிருந்து மக்கள் கந்தரைக்கு குடிபெயர்ந்து வாழ்கின்றனர் என்பதை இந்த ஆய்வின் மூலம் அறிய முடிகின்றது. இன்னும் இப்பிரதேசத்தில் 2004ஆம் ஆண்டு இடம் பெற்ற சுனாமிப் பேரலையின் பின்னரும் மக்களின் குடியேற்றங்கள் அதிகரித்தது. அவ்வாறு வந்தவர்களும் அவர்களது குடியேற்றங்களை நிரந்தர குடியிருப்புக்களாக அமைத்துக் கொண்ட வரலாற்றினையும் இதன் மூலம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது. இந்த பல்வகையான கலாசாரப் பின்புலங்கள் ஒன்றிணைந்து கந்தரையின் வரலாற்றுக்கும் கலாசாரத்திற்கும் பண்பாடுகளுக்கும் அத்திவாரம் இட்டது. எனவே இப்பிரதேசத்திலும் தென் மாகாண முஸ்லிம்களது கலாச்சார பண்பாடுகள் தாக்கம் பெற்று வளர்ச்சி கண்டுள்ளது என்பதனை இவ்வாய்வினூடாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**உசாத்துணைகள்**


1. அனஸ் எம்.எஸ்.எம்.(2009), புத்தளம் முஸ்லிம்களின் வரலாறும் வாழ்வியலும், அப்துல் அஸீஸ். ஐ.எல.எம்.ஏ (1907), இலங்கைச் சோனக இன வரலாறு ஒரு திறனாய்வு. சோனக இஸ்லாமிய கலாசார நிலையம், கொழும்பு.
2. அனுராதபுர மாவட்ட முஸ்லிம்கள்(1902), முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு, கொழும்பு.
3. ஆசிரியர் குலாம், (2013), பரிசளிப்பு இதழ், மாறை அல் அஸ்ஹர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயம் கந்தரை.
4. காலிதீன்.கே.எம்.எச். (1986) இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, அகில இலங்கை கதீப்மார் சம்மேளனம், கொழும்பு.
5. காத்தான்குடி வரலாறு, (2004), காத்தான்குடி பள்ளிவாயல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.
6. மஹ்ரூப். எம்.எம்.எம். (1995), மாத்தரை மாவட்ட முஸ்லிம்கள், இலங்கை அரசாங்க அச்சகம்.
7. online available: Srilankamuslims.lk , இலங்கை முஸ்லிம்களது வரலாறு.
8. online available: islamkalvi.com, இலங்கை சோனகர்களின் பூர்வீகம்.
9. online available: ta.m.wikipwdia.org, தென்மாகாணம், இலங்கை.


**நேர்காணல்**

1. மர்ஜால்.ஐ., எம், 2019-08-10, உப அதிபர், கந்தரை.
2. மிப்லர்.எம்., 2019-08-12 சமாதான நீதிவான்.கந்தரை.
3. நஜீமா.எம்.கே.என்., 2019-08-12 ஆசிரியை, கந்தரை.
4. அஜ்வார்ட்.எ.எ.எம்., 2019-08-05 ஓய்வு பெற்ற பள்ளி பரிபாலன சபைத் தலைவர், கந்தரை.
5. பவாஸ்.எம்.எப்.எம்., 2019-09-05 ஆசிரியர், திக்குவல்லை.